முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

# (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2021-10-24
பிற்பகல்
[01.45 – 05.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** “வினைத்திறன் (efficiency)” என்பது

(1) உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையிலான தொடர்பு
(2) சரியாகச் செய்வது (doing things in right)
(3) சரியானதைச் செய்வது (doing the right thing)
(4) விரும்பிய வெளியீட்டை உற்பத்தி செய்வதற்கான இயலுமை

**1.2** பின்வருவனவற்றுள் முகாமைத்துவத்தின் தனிநபர் வகிபாகங்களை உள்ளடக்கிய தொகுதி எது?

(1) தொழில் முயற்சியாளர், வள ஒதுக்கீட்டாளர், பேரம் பேசுபவர்.
(2) கண்காணிப்பாளர், பரப்புபவர், பேச்சாளர்.
(3) பிரமுகர், தலைவர், தொடர்பாளர்.
(4) தலைவர், இடையூறுகளைக் கையாள்பவர், கண்காணிப்பாளர்.

**1.3** கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக :

**(a)** முகாமைத்துவச் செயன்முறையில் திட்டமிடல் நிலைக்கு (stage) முன்னர் தீர்மானம் எடுத்தல் நிகழ்கிறது.

**(b)** படிநிலையின் சகல மட்டங்களிலுமுள்ள அனைத்து முகாமையாளர்களும், அவர்களுக்காக ஒதுக்கப்படும் பொறுப்புக்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பது தேவையானதாக இருக்கிறது.

**(c)** ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர்பாடுதல் போன்ற முகாமைத்துவச் செயன்முறையின் பிற தொழிற்பாடுகளை முன்னெடுக்கும்போது தீர்மானமெடுத்தல் முக்கியமானதாக இருக்கிறது.

மேலுள்ளவற்றுள், தீர்மானமெடுத்தல் தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்கள் :

(1) **(b)** மாத்திரம். (2) **(c)** மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.4** வேலையில் மனிதப் பரிமாணங்களை (human dimensions) உள்ளடக்குகின்ற முகாமைத்துவக் கோட்பாடுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) அதிகாரவியல் கோட்பாடுகள் (2) நடத்தைசார் கோட்பாடுகள்

(3) தரரீதியான கோட்பாடுகள் (4) விஞ்ஞான முகாமைக் கோட்பாடுகள்

**1.5** கீழ்வருவனவற்றுள் மனித வள முகாமைத்துவத்தின் ஒரு தொழிற்பாடு **அல்லாதது** எது?

(1) செயலாற்றுகை மதிப்பீடு

(2) ஒழுக்காற்று முகாமை

(3) செயன்முறை வரைபடம் (Process layout)

(4) வாடகைக்கு அமர்த்துதலும் தொழிலுக்கு அறிமுகப்படுத்துதலும்

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல.* **1.6** *தொடக்கம்* **1.10** *வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** …………………. *(திட்டமிடல் / ஒழுங்கமைத்தல்)* தொழிற்பாடானது வேலைகளைச் சிறிய அலகுகளாகப் பிரிப்பதுடன் ஆரம்பமாகிறது.

**1.7** ……………….. *(குறைநிலை [poor] / சேவை [service])* பொருளாதாரத்தை நோக்கி மாறுவதானது, நவீன வணிக உலகில் முகாமையாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாக மாறியுள்ளது.

**1.8** …………………. *(இரு காரணிக் கோட்பாடு / தேவைப் படிநிலைக் கோட்பாடு)* ஆனது மனிதத் தேவைகள் மற்றும் ஊக்கப்படுத்தலுக்கிடையிலான தொடர்பினை விளக்குகிறது.

**1.9** …………………. *(உற்பத்திப்பொருள் எண்ணக்கரு / உற்பத்தி எண்ணக்கரு)* ஆனது உயர்ந்த தரத்தில் இருந்தான உயர்ந்த அளவு இலாபம் பற்றி அக்கறை கொள்கிறது.

**1.10** …………………. *(நிலைமாறு மாற்றம் / தந்திரோபாய மாற்றம்)* என்பதை நிறுவனமானது அதன் கருத்தியலுக்கு (paradigm) வெளியே பணியாற்றுகின்ற ஒரு பெரிய, அடிப்படையான நடவடிக்கை ஒன்றாக வரையறுக்கலாம்.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** மெக்ஸ் வேபர் (Max Weber) இன் கூற்றுக்கிணங்க அதிகாரவியலின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.12** இரண்டு (02) திட்டமிடல் கோட்பாடுகளை நிரற்படுத்துக.

**1.13** தொடர்பாடலுக்கான இரண்டு (02) தடைகளைக் (barriers) குறிப்பிடுக.

**1.14** முகாமையாளருக்கும் தலைவருக்கும் இடையிலான இரண்டு (02) வேறுபாடுகளை நிரற்படுத்துக.

**1.15** "மாற்ற முகாமைத்துவம் (Change Management)" எனும் பதத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 02

நிறுவனத்தின் கட்டமைப்பானது, அதன் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு செயற்பாடுகள் எவ்வாறு வழிப்படுத்தப்படுகின்றன என்பதை கோடிட்டுக் காட்டுகிறது. இது அதன் வணிகச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து கட்டுப்படுத்த வணிகத்திற்கு உதவுகிறது. தீர்மானமெடுத்தல் செயன்முறையில் தகவல்கள் எவ்வாறு பாய்கின்றன என்பதையும் இது வரையறுக்கிறது. நிறுவனக் கட்டமைப்பொன்றில், முகாமையாளர்கள் அதிகாரத்தையும் (authority) பொறுப்புக்களையும் (responsibility) கையளித்தல் வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) அதிகாரம் மற்றும் பொறுப்புக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) ஒழுங்கமைத்தல் செயன்முறையில் காணப்படும் பிரதான படிமுறைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) முகாமையாளர் ஒருவருக்கு தீர்மானமெடுத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

கோவிட் 19 நோய்ப் பரவலானது உலகளாவிய பொருளாதாரம் மற்றும் வணிகங்கள் மீது பாரியளவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. புதிய இயல்பு நிலையானது ஊழியர்களை வீட்டிலிருந்து பணி செய்வதற்குத் (WFH) தள்ளியுள்ளது. சில வேளைகளில் ஊழியர்கள் இத்தகைய புதிய சவால்களை அனுசரித்துச் செல்லத் தயக்கம் காட்டுகின்றனர். இந்தப் புதிய சவால்கள் காரணமாக, நிறுவனம் ஒன்றின் மனித வள முகாமைத்துவச் (HRM) தொழிற்பாடுகள் மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மனித வளப் (HR) பற்றாக்குறையைச் சமாளிப்பதற்குப் பின்பற்றக்கூடிய தந்திரோபாயங்கள் (strategies) இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) கோவிட் 19 நோய்ப் பரவல் நிலைமைகளின்போது, நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் மனித வள முகாமைத்துவத்தின் (HRM) தொழிற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) ஒரு நிறுவனம், மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிக்கக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளை (ways) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

ஒரு தந்திரோபாயமானது, நிறுவனமொன்று அதன் சொந்த எதிர்காலத்தை வடிவமைப்பதில் எதிர்வினையாற்றுவதைவிட அதிக முனைப்புடன் செயற்பட நிறுவனங்களை வழிநடத்துகிறது. நிறுவனங்கள் தமது எதிர்கால வணிகங்களைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றன. நிறுவன ஆயுட்காலத்தில் நிறுவனம் தனது நோக்கங்களை அடைந்து கொள்கின்ற அதே வேளை, வெளிவாரிச் சூழலுக்கு ஏற்றவாறு உள்ளகச் சூழலைச் சீரமைப்பதற்கும் தந்திரோபாயமானது நிறுவனத்தை வழிநடத்துகிறது. அதன் நடவடிக்கைகளில் வினைத்திறனாகவும் பயனுறுதித்தன்மையுடனும் இருப்பதற்கு திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் பிரதானமானதாக இருக்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனங்களில் காணப்படும் மூன்று (03) வெவ்வேறு வகையான தந்திரோபாயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) கிரயத் தலைமைத்துவம் (cost leadership) மற்றும் பேதப்படுத்தல் (differentiation) ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாடுகளை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) கட்டுப்படுத்தலின் வரையறைகள் (limitations) இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

தொழிற்பாட்டு முகாமைத்துவமானது நிறுவனமொன்றினுள் உற்பத்தி மற்றும் விநியோகச் சேவைகள் நடைபெறும் சூழமைவில் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைச் செயன்முறைகளில் பாரிய பங்கினை ஆற்றுகிறது. இது நிறுவனம் ஒன்றினுள் சாத்தியமான உயர் வினைத்திறன் மட்டத்தை உருவாக்குவதை நோக்காகக் கொண்டிருக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் (Porter's Value Chain) உள்ள துணை நடவடிக்கைகள் (support services) இரண்டினை (02) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனமொன்றின் வெற்றிக்கான தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு (02) வகிபாகங்களை (roles) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இரண்டு (02) பிரதான உற்பத்தி முறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

நிறுவனங்கள் வாடிக்கையாளர்களைக் கவருகின்ற மற்றும் வாடிக்கையாளர்களுக்குத் தகவல்களை வழங்குகின்ற ஒரு கருவியாக சந்தைப்படுத்தலைப் பயன்படுத்துகின்றன. தற்போது சந்தையில் காணப்படுகின்ற அதிக போட்டி காரணமாக, சில வேளைகளில் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கும் அதே போன்று அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் என நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் நெறிமுறையற்றதாக இருக்கலாம். மேலும், கோவிட் 19 நோய்ப் பரவலுடன் நிறுவனங்கள் பல்வேறுபட்ட சந்தைப்படுத்தல் உபாயங்களைப் பயன்படுத்தவும் வேண்டியுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) விளம்பரப்படுத்தலில் காணப்படும் இரண்டு (02) நெறிமுறையற்ற நடைமுறைகளை (unethical practices) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) சந்தைப்படுத்தலில் நெறிமுறைகள் (ethics) ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டிற்கு ஏற்படும் தாக்கங்கள் இரண்டினை (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட GAG கம்பனியானது** இலங்கையில் மென்பானத் தயாரிப்புத் துறையில் முக்கிய பங்கினை வகிக்கின்ற ஒரு கம்பனியாகும். இக்கம்பனியின் வெற்றிக்குப் பங்களிப்புச் செய்கின்ற வலுவான ஒருமுகப்படுத்தப்பட்ட "ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கிளை" ஒன்றை இது கொண்டிருக்கிறது. இது அண்மையில், மக்கள் மென் பானங்களைக் குடிப்பதை விட அதிக ஆரோக்கியமான பழச்சாறுகளைக் குடிக்க விரும்புவதைக் அறிந்து கொண்டது. இது தொடர்பான சாத்தியவள ஆய்வுகள் நடத்தப்பட்டதன் பின்னர், பணிப்பாளர் சபையானது சந்தையை இலக்கு வைத்து பழச்சாறுகளைக் தயாரிக்கத் தீர்மானித்திருந்தது. **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியின்** புதிய பழச்சாறுக்கு "Nectarzz" என்ற வர்த்தக நாமம் சூட்டப்பட்டது. 2021 பெப்ரவரியில், மாம்பழச் சுவை, தோடம்பழச் சுவை, அப்பிள் சுவை மற்றும் பழக்கலவைச் சுவை ஆகிய நான்கு வெவ்வேறு சுவைகளில் உள்நாட்டுச் சந்தைக்கு "Nectarzz" அறிமுகப்படுத்தப்பட்டது. உணவுப் போக்குவரத்துத் தூரத்தைக் (food miles) குறைப்பதற்காக, பண்ணைகளும் (1,000 செய்கையாளர்கள்) தொழிற்சாலையும் (2500 ஊழியர்கள்) ஒரே புவியியல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு 120 ml அளவுள்ள பழச்சாறுப் பக்கெற்றுகளும் 500 ml அளவுள்ள பழச்சாறுப் போத்தல்களும் தயாரிக்கப்படுகின்றன. சந்தையைப் பிடிப்பதற்காக போத்தல்கள் மக்களைக் கவரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. உற்பத்திப் பொருள்கள் **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியின்** வழங்கல் கிளையினால் நாடு பூராகவும் விநியோகம் செய்யப்படுகின்றன. வாடிக்கையாளர்கள் நியாயமான விலையில், தரப்பட்ட எந்தவொரு விற்பனை நிலையத்திலும் அவற்றைக் கொள்வனவு செய்ய முடியும். விற்பனையாளர்களிடமிருந்து தொகையளவில் (அதிக அளவில்) கொள்வனவு செய்பவர்களுக்கு கவர்ச்சிகரமான விற்பனைக் கழிவுகள் வழங்கப்படுகின்றன. புதிய பொருள் பற்றிய சந்தைப்படுத்தல் பிரச்சாரமானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியானது** பிரதானமாக நாட்டிலுள்ள ஆரோக்கிய உணர்வு கொண்ட வாடிக்கையாளர்களை இலக்கு வைத்திருக்கிறது. **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியின்** பொருள்கள் பற்றிய சந்தேகங்கள் தொடர்பில் தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்காக வாடிக்கையாளர்கள் ஊட்டச்சத்து நிபுணரைத் தொடர்பு கொள்ள முடியும். மேலும், வாடிக்கையாளர்கள், உரிய அனுமதியைப் பெற்று தொழிற்சாலையைப் பார்வையிட முடியும். கம்பனியானது தமது ஊழியர்களுக்காக தொடர்ச்சியான வேலைப்பட்டறைகளையும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்கிறது. எவ்வாறாயினும், கோவிட் 19 நோய்ப் பரவல் நிலைமை காரணமாக, கம்பனியானது கள விஜயங்களைக் கட்டுப்படுத்தியுள்ளது. இதனால் கம்பனியின் முகாமையானது தங்கள் வாடிக்கையாளர்களுடன் அவர்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான மாற்று முறைகள் பற்றிச் சிந்திக்கின்றது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நிறுவனத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியின்** தலைமைத் துவத்தினது வகிபாகம் ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களை **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) கோவிட் 19 நோய்ப் பரவல் காலத்தில் **வரையறுக்கப்பட்ட GAG கம்பனி** ஊழியர்கள் ஊக்கப்படுத்தப் படுவதன் மூன்று (03) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) இந்த நோய்ப் பரவல் சூழ்நிலையில் "Nectarzz" பொருள்களுக்கு **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியால்** பயன்படுத்தப்பட வேண்டிய ஊக்குவிப்பு முறைகள் நான்கினைக் (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட GAG கம்பனிக்கு** மனித வள முகாமைத்துவத்தின் ஒரு தொழிற்பாடான ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்தின் நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(e) **வரையறுக்கப்பட்ட GAG கம்பனிக்கு** தந்திரோபாயத் திட்டமிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |